# நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு மிகப்பெரிய அநீதி இழைத்ததால் – மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ரூ.12 ஆயிரம் கோடி சொந்த நிதியை ஒதுக்க வேண்டிய நிலை!

## பேரவையில் – அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொதுவாக அந்த மின் தேவையை ஈடு செய்வதற்கு நம்முடைய மொத்த நிருவு திறன் என்பது 36,563 megawatt-ஆக இருக்கிறது. இதில் அனல் மின் நிலையங்கள்மூலம் 2023-2024 ஆம் ஆண்டிலே 25,478.94 million unit உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இந்த மின் உற்பத்தி என்பது 2020-2021 ஆம் ஆண்டு உற்பத்தியில் 15,553.52 million unit-உடன் ஒப்பிடுகையில் 63.8 சதவிகிதம் அதிகமாக நாம் உற்பத்தியைச் செய்திருக்கி றோம். இதுவரை இல்லாத அளவிற்கு நான் குறிப்பிட்டதைப்போல, மின்சாரத் தேவை உச் சத்தை எட்டியிருக்கின்ற போதிலும்கூட, நம்மு டைய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர் மானக் கழகம் என்பது மிகச் சிறப்பாக செயல்பட்டு இந்த மின் தேவையைப் பூர்த்தி செய்திருக்கிறது.

இதைப் பூர்த்தி செய்வதற்காக நாம் மின் பகிர்மானக் கழகத்தின் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரம், அதைப்போல வெளி மின்சாரத்தை மின் பரிமாற்றம் மற்றும் குறுகிய கால ஒப்பந்தங்கள் மூலமாக மின்சா ரத்தைப் பெற்று, எந்தவிதமான பற்றாக்குறை யும் இல்லாமல், நாம் எந்தவித இடைவெளி யும் இல்லாமல் அதை வழங்கியிருக்கிறோம் என்பதை நான் இங்கே உங்களிடத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மிக முக்கியமாக கடந்த ஆண்டு நம்மு டைய மின்சார வாரியத்தில் நாம் செய்திருக் கக்கூடிய மிகப்பெரிய திட்டம் வடசென்னை அனல் மின் திட்டங்களுடைய அலகு மூன்று; நீண்டகாலமாக அந்தத் திட்டம் பல்வேறு கார ணங்களாலே நிறைவேற்றப்படாமல் தேங்கி யிருக்கக்கூடிய அந்தத் திட்டத்தை திருவள்ளூர் மாவட்டத்தில் அத்திப்பட்டு கிராமத்தில் ஏறத் தாழ 8,723 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலே இருக்கக்கூடிய அந்த மிக முக்கியமான ஓர் திட் டம்; 800 megawatt திறன் கொண்டிருக்கக்கூ டிய அந்த மின்சார உற்பத்தி நிலையம் நம்மு டைய முதலமைச்சர் கடந்த மார்ச் மாதம் 7 ஆம் தேதியன்று அதை நம்முடைய நாட்டிற் காக அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்களு டைய பெரும் முயற்சியின் காரணமாக நீண்ட காலமாக நிலுவையில் இருக்கக்கூடிய அந்தத் திட்டத்தை நாங்கள் தாமதப்பட்ட அந்தத் திட்டத்தை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, நம்முடைய மின்சார வாரியம் அதை மிகச்சிறப்பாகக் கையாண்டு மிக விரைவிலே அந்தப் பணி களை முடித்து அது இப்போது பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் என்பது One trillion dollar economy நமக்குத் தேவையான மின்சாரத்தை உருவாக்க வேண்டிய காலகட்டத்திலே அது நமக்கு சிறந்த அளவிலே இந்தத் திட்டம் முக்கியப் பங்கினை வகிக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். மின்சார வாரியத் தைப் பொறுத்தமட்டிலே நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், மீண்டும் நான் சொல்வேன். இந்த மிக்ஜாம் புயல் அதைப் போல, தென் மாவட்ட புயல் வருகிறபோது. மிகப்பெரிய ஒரு பாதிப்பினை நாம் பெற் றோம். புயல் வந்துவிட்டது; மழை கொட்டித் தீர்த்தது.

மின்சார வாரியம் மிக சமயோஜிதமாக செயல்பட்டு எல்லா இடங்களிலும் மின்சாரத்தை உடனடியாக நாம் நிறுத்தி னோம். மின்சாரம் வரவில்லையென்று அங்கே எல்லோரும் வருத்தப்பட்டார்கள். ஆனால், மிக சமயோஜிதமாக மின்சாரத்தி னுடைய அந்த supply-ஐ நிறுத்திய காரணத்தி னால்தான் பல நூற்றுக்கணக்கான உயிரிழப் புகளை நம்மால் தடுக்க முடிந்தது. அது மாதி ரமல்லாமல் அந்தப் புயலிலே பல்வேறு பாதிப்புகள், பல்வேறு மின்மாற்றிகள், மின் நிலையங்கள் அதைப்போல மின் கம்பங்கள், மின் கடத்திகள் என்று பல இடங்களிலே அது பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட, மிக வேகமாக நம்முடைய மின்சார வாரியம் இணைந்து, (குறுக்கீடு) (முடித்துவிடுகிறேன்) இரண்டே நாட்களில் சில இடங்களில் 3 நாட்களிலே அது செய்யப்பட்டிருக்கிறது. 2015 ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கக்கூடிய அந்த வெள்ள சீர மைப்பை நீங்கள் பார்த்தீர்களென்று சொன் னால், அன்றைக்கு அதை 7 நாட்கள் எடுத் துக்கொண்டார்கள்.

ஆனால், சென்னையைப் பொறுத்தமட்டில் நீங்கள் பார்த்தீர்களென்றால், பல இடங்க ளிலே நாங்கள் இரண்டு நாட்களிலே பணி களை முடித்திருக்கிறோம். சில இடங்களில் 3 நாட்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். 7 நாட்களில் முடிக்க வேண்டிய அந்தப் பணி களை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலே நாங்கள் அந்த இயல்பு நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோலதான், தூத்துக்குடியிலும் அந்த நிலைமை இருந்தது. அங்கேயும் 100 சதவிகிதமான மின் விநியோ கம் நெல்லை, தென்காசி, கன்னியாகுமரியி லும் கொடுத்தாலும்கூட, பல இடங்களிலே 90 சதவிகிதமான இடங்களிலே இரண்டொரு நாட்களிலே கொடுத்திருக்கிறோம்.

அதைப்போல, நிலக்கரியை கையாளு கின்ற பணிகளிலும் மிகச் சிறப்பாக நாங்கள் செயல்பட்டிருக்கின்றோம். மிகக் குறிப்பாக, இந்த முறை பசுமை எரிசக்திக்காக ஒரு புதிய நிறுவனத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒருபுறம் இருந்தாலும், fossil free environment-ஐ நாம் கொண்டு வர வேண்டும். புதிய புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை உரு வாக்க வேண்டுமென்பதிலே எல்லோருமே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். ஒன்றிய அரசும் அதில் ஆர்வமாக இருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், ஒன்றிய அமைச்சர் என்னிடத்தில் சொன்னார்கள்; இந் தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களையெல் லாம் ஒப்பிடுகையிலே தமிழ்நாட்டில்தான் மின்வெட்டு என்பதே இல்லாமல் மிகச் சிறப் பாக இருக்கக்கூடிய மாநிலம் என்ற certifi cate-ஐயும் அவர் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே எந்த பார பட்சமும் இல்லாமல் உறுதியாக இருக்கின் றோம். தமிழ்நாடு என்பது 19,628 மெகாவாட் புதுப்பிக்கத்தக்கக்கூடிய எரிசக்தி உற்பத்தியில் இந்தியாவில் நாம் மூன்றாவது இடத்தில் இருக் கின்றோம். 2023-2024 ஆம் ஆண்டில் மட் டும் 1994 மெகாவாட் நாம் கூடுதலாக நிறுவியி ருக்கின்றோம்.

சூரிய மின்சக்தியைப் பொறுத்தமட்டில், நிறுவதிறன் நமக்கு 8145.53 மெகாவாட்டு டன் இந்திய அளவில் நாம் நான்காவது இடத்தில் இருக்கின்றோம். 2023-2024 ஆம் ஆண் டில் மட்டும் நிறுவப்பட்ட திறன் 1462.635 மெகாவாட்டாக நமக்கு இருக்கிறது.

### காற்றாலை உற்பத்தி!

காற்றாலை உற்பத்தியைப் பொறுத்தமட் டில், தமிழ்நாடு 10,590.68 மெகாவாட் நிறு வுத்திறனுடன் இரண்டாவது இடத்திலே நமது மாநிலம் இருக்கிறது. 2023-2024 ஆம் ஆண்டில் மட்டும் கூடுதலாக நிறுவப்பட்டுள்ள திறன் 524.48 ஆக இருக்கின்றது. நான் துவக்கத்திலேயே குறிப்பிட்டதுபோல, மரபு சாரா எரிசக்தியை ஊக்கப்படுத்தக்கூடிய வகை யிலே, நாம் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக எடுத்து வருகின்றோம். முதலீட் டாளர்கள் தொடர்ந்து முதலீடுகளை செய்து வருகிறார்கள் என்பதை நான் இங்கே தெரி விக்க விரும்புகிறேன். எனவே, 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத் தியில் இந்தியளவில் முதன்மையான மாநில மாக தமிழ்நாடு திகழ வேண்டுமென்கிற முதல மைச்சர் அவர்களின் தொலைநோக்கு இலக்கினை நம்முடைய மின்சார வாரியம் பெறுவதற்கு அளவில் இந்த ஆண்டு 2030 ஆம் ஆண்டுக்குள் கூடுதலாக 100 பில்லியன் யூனிட்களை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வாயி லாக தமிழ்நாடு அரசு உற்பத்தி செய்வதற் கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள் ளும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய பல்வேறு உறுப்பினர்கள் துணை மின் நிலையங்களை கேட்டிருக்கின் றார்கள். பல இடங்களில் மின்மாற்றிகளை யெல்லாம் மாற்றித் தர வேண்டுமென்று கேட் டிருக்கிறார்கள். வெட்டுத் தீர்மானங்களின் மூல மாக கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே செய் யப்பட்டிருக்கக்கூடிய அறிவிப்புகளிலும் அதைப் பற்றி சொல்லியிருக்கின்றோம். ஒவ் வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் களுடைய இருக்கையிலே வைத்திருக்கி றோம். என்னென்ன பணிகளையெல்லாம் கடந்த காலங்களில் செய்திருக்கிறோம். வரக் கூடிய இந்தாண்டிலும் என்னென்ன பணிகள் செய்வதற்காக இருக்கிறோம் என்பதையும் நான் கொடுத்திருக்கிறேன். எனவே, அந்தப் பிரிவுகளிலும் தேவையான அளவிற்கு மின் பகிர்மானம் மற்றும் தொடரமைப்புக் கழகத் தின் மூலமாக அவற்றையெல்லாம் செய்ய வேண்டும்.

### புதைவடக் கம்பிகள் அமைக்கும் பணி!

மிகக் குறிப்பாக, பல்வேறு திருக்கோயில் கள் அமைந்திருக்கும் தேரோடும் வீதிகளில் புதைவடக் கம்பிகளை அமைக்கும் பணியை யும் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். மின்னகம். வரக்கூடிய complaints-களை at tend செய்வதற்கு குறிப்பாக முதலமைச்சர், அன்றைக்கு ஒருமுறை அவரே பார்த்துவிட்டு. அவரது அலுவலகத்திற்கு வந்த குறிப்பை வைத்து. மின்னகத்திற்கு கூடுதலான பணி யாளர்களை நியமித்து, அங்கு வரக்கூடிய குறைகளையெல்லாம் கேட்டு நிவர்த்தி செய்ய வேண்டுமென அறிவுரை வழங்கியிருக்கின் றார்கள். அந்த அடிப்படையில் அந்த மின்னகமும் சிறந்த முறையில் இன்றைக்கு செயலாக்கத்திற்கு வந்திருக்கிறது என்பதை யும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆக, இந்தத் துறையைப் பொறுத்தமட் டிலே, உங்கள் அத்துணை பேரின் பங்களிப் போடு சிறப்பாக நடந்திருக்கிறது. வெட்டுத் தீர் மானங்களைப் பொறுத்தமட்டில், நிதித் துறை, எரிசக்தித் துறை, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மனித வள மேம் பாட்டுத் துறை, ஓய்வூதியத் துறையையும் உள்ளடக்கி ஏறத்தாழ 336 வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. நான் அவற் றையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக படித்துப் பார்த்திருக்கிறேன். அந்த வெட்டுத் தீர்மானங்களை கொடுத்தது மாத்திரமல்ல, அவ்வப்போது நீங்கள் என்னுடைய அறையி லும், என்னை நேராகவும் பார்த்து சொல்லக் கூடிய பல்வேறு கோரிக்கைகள்,

சட்டமன்ற உறுப்பினர் சதாசிவம் போன்ற வர்களெல்லாம் Mettur Thermal Power Station குறித்த பிரச்சினைகளை என்னிடம் கொண்டு வந்துள்ளார்கள். நான் உங்களுக்கு உறுதிய ளிக்கிறேன். நிச்சயமாக அவற்றை நேரடியாக கண்காணித்து அதற்கான உரிய தீர்வுகளை வழங்குவதற்கு அரசு முன்னெடுக்கும் என்ப தைத் தெரிவித்துக்கொண்டு,

இந்த மானியக் கோரிக்கையை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு எங்களோடு ஊக்கம ளித்த அரசு தலைமைச் செயலாளர் அவர்க ளுக்கும், நிதித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன். I.A.S., அவர்க ளுக்கும், அரசு கூடுதல் தலைமைச் செயலா ளர்/மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, I.A.S., அவர்களுக்கும், எரிசக்தித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு மதி பீலா ராஜேஷ், I.A.S., அவர்களுக்கும், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சி துறையினுடைய ரமேஷ் சந்த் மீனா, மனித வள மேம்பாட்டுத் துறையி னுடைய அரசு செயலாளர் கே.நந்தகுமார், ஆகியோர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப் பாக நிதித் துறை என்று சொன்னாலும்கூட, திருப்பதி வெங்கடேசபெருமாளுக்கு கடன் கொடுக்கக்கூடிய குபேரனைப்போல, நிதித் துறைக்கு நிதி வழங்கக்கூடிய துறை நம்மு டைய வணிக வரித் துறை, மற்றும் பதிவுத் துறைக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட் டும் ஒலி) உங்களையும் சேர்த்து சொல்லிவிடு கிறேன். உங்களையும் சந்தோஷப்படுத்த விரும்புகிறேன். போக்குவரத்துத் துறை, உள் துறை, கனிம வளத் துறை, நம்முடைய அவை முன்னவர் அவர்களுடைய துறை. எங்களுக்கு பணம் கொடுக்கக்கூடிய பணம் அளிக்கும் பகவான்கள் அத்தனைபேருக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கக் கூடிய வெட்டுத்தீர்மானங்களை திரும்பப்பெற்றுக்கொண்டு, அரசு கோரியிருக் கும் தொகைகளை வழங்கிடவேண்டுமென்று அன்போடு கேட்டு. என் உரையை நிறைவு செய்கிறேன்.

### திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அறிவிப்புகள்

1. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து அமைக்கப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையத்தின் மூலம் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சி கள் துறை, தமிழ்நாடு பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்பு இணைய தளத்தை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் துவக்குதல்.

இந்த இணையதளம் பல்வேறு மண்ட லங்கள் மற்றும் துறைகளில் உள்ள திட்டங்களுடன் தொழில் மற்றும் பெருநிறுவ னங்களின் சமூகப் பொறுப்புணர்வினை இணைக்கும் ஒருங்கிணைப்பு தளமாக செயல்படும். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட் டங்கள் மற்றும் துறைகளின் சமமான ஒதுக் கீட்டை உறுதிசெய்து, சமமான வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும்.

2. மாநில திட்டக் குழுவின் கீழ் இயங்கும் தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரி யம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) இணைந்து, மாநிலத்தின் நிலப்பயன்பாட்டு முறைகளுக்கான முன்க ணிப்பு மாதிரி கருவியான நிலப் பயன்பாட்டு தகவல் அமைப்பினை (LUIS) உருவாக்குதல்.

பருவநிலை மாற்றம், காடுகள். நீர்வள ஆதாரங்கள், நகர்ப்புற மற்றும் வளர்ந்து வரும் நகர்ப்புறங்கள், நில பயன்பாடு/ நிலப்பரப்பு, கடலோர பகுதிகள் மற்றும் கடல் கள், எரிசக்தி மற்றும் உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் நிலைத்தன்மை போன்ற ஒன்பது முக்கிய அம்சங்களை அடிப்படை யாகக் கொண்டு, கொள்கை ஒருங் கிணைப்பிற்கு பயன்படுத்தக்கூடிய ஆராய்ச்சி மாதிரிகளை உருவாக் குவதை இந்த நிலப் பயன்பாட்டு தகவல் அமைப்பு நோக்கமாகக் கொண்டிருக்கும். நிகழ்நேர கண் காணிப்பு மற்றும் மாநிலத்தின் நில பயன்பாட்டு முறைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிப்பதற் கும், ஆதாரப்புள்ளியுடன் கொள்கை கள் மற்றும் திட்டங்களை உரு வாக்குவதற்கும், திட்டங்கள் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும் இந்த இணைப்புத்தளம் உறுது ணையாக செயல்படும்.

3. சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS)/ சென்னை பொருளியல் கல்வி நிறு வனம் (MSE)/ இந்திய தொழில் நுட்ப கழகம் (IIT), சென்னை போன்ற உயர்தர கல்வி நிறுவ னங்களுடன் இணைந்து, மாநில திட்டக் குழு, பொது மேலாண்மை யில் ஆறு மாத சான்றிதழ் படிப் பினை ஆண்டொன்றிற்கு ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் துவங்குதல்.

இச்சான்றிதழ் படிப்பு, அரசுத் துறைகளின் செயல்பாடுகள் சார்ந்த விரிவுரைகள் மற்றும் செயல்முறை பயிற்சிகள் ஆகிய வற்றை உள்ளடக்கியது. இத்திட்டத் தில் பங்கேற்கும் உயர் தரவரிசை கல்வி நிறுவனம் விரிவுரைகளை வழங்கும். மாநில திட்டக் குழு, அர சுத் துறைகளின் செயல்பாடுகள் சார்ந்த செயல்முறை பயிற்சிகளை அரசுத் துறைகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வழங் கும். இச்சான்றிதழ் படிப்பில் பயிற்சி பெற்றவர்கள், பொது நிர்வாக அமைப் பின் சாராம்சம், அரசு திட்டங்களின் நோக்கங் கள், பொது கொள்முதல் குறித்த விதிகள் மற் றும் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றை நன்கு புரிந்து கொண்டு பொதுத் திட்டங்களில் புதுமை களை புகுத்துவதற்கு உதவுவார்கள்.

4. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையும், தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து மாவட்ட அளவிலான பயிர் பரப்பளவை மதிப்பிடுவ தற்கு அதிநவீனத் தொலை உணர்தல் மற்றும் ட்ரோன் அடிப்படையிலான தொழில்நுட்பத் தைப் பயன்படுத்திப் பயிர் புள்ளிவிவரங்கள் சேகரித்து, முதற்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்டங்களில் முன்னோடி திட்டமாகச் செயல்படுத்தப்படுதல்.

பயிர் பரப்பளவு, விளைச்சல் மற்றும் உற் பத்தி புள்ளிவிவரங்களின் துல்லியத்தையும், உரிய காலத்தில் மதிப்பிடுவதை மேம்படுத்த வும், உழவர் நலனுக்கான கொள்கை முடிவு கள் எடுப்பதிலும், உழவர்களுக்கு உதவவும் மற்றும் காப்பீட்டுச் செலவுகளைச் சீராக வழங் கவும் தேவையான நேரடி தகவல்களை அளிப்பதற்கு இந்த தொழில் நுட்பம் உதவும்.

### எரிசக்தித் துறை, அறிவிப்புகள்

1. ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் அதிக மின்சுமை மற்றும் குறைந்த மின்னழுத்தத்தை சரி செய்ய தமிழ்நாடு முழு வதும் புதிய/கூடுதலாக விநியோக மின்மாற்றிகளை நிறுவுதல்.

தரமான மின்சார விநியோகத்திற்காக, 11 கி.வோ மற்றும் 22 கி.வோ மின்னழுத்த விகி தங்களில் 25 கேவிஏ, 63 கேவிஏ, 100 கேவிஏ, 200 கேவிஏ மற்றும் 250 கேவிஏ ஆகிய பல்வேறு திறன்களைக் கொண்ட 2,500 எண்ணிக்கை புதிய/கூடுதலாக விநி யோக மின்மாற்றிகளை, சுமார் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் நிறு வுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2. தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் ஊர்க ளில் அமைந்துள்ள தேரோடும் வீதிகளில் செல் லும் மேல்நிலை மின் கம்பிகளை புதைவடங் களாக மாற்றி அமைத்தல்.

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோவில், கும்பகோணத்திலுள்ள அருள் மிகு காசி விஸ்வநாதர் திருக்கோவில், அருள் மிகு திருநாகேஸ்வரர் திருக்கோவில், அருள் மிகு கௌதமேஸ்வரர் திருக்கோவில், அருள்மிகு வீர சைவ மடம், அருள்மிகு அபிமு கேஸ்வரர் திருக்கோவில், அருள்மிகு சாரங்க பாணி திருக்கோவில், அருள்மிகு சோமேஸ்வ ரர் திருக்கோவில், அருள்மிகு கும்பேஸ்வரர் திருக்கோவில், அருள்மிகு கம்பட்ட விஸ்வநாதர் திருக்கோவில், அருள்மிகு சக்ர பாணி திருக்கோவில், அருள்மிகு ஸ்ரீ காள ஹஸ்தீஸ்வரர் திருக்கோவில் ஆகிய திருத்த லங்களிலுள்ள தேரோடும் வீதிகளில் மேலே செல்லும் மின்கம்பிகள் அனைத்தும் புதைவ டங்களாக மாற்றியமைக்கப்படும்.

இத்திருத்தலங்களில் நடைபெறும் தேரோட்டத்தின் போது பல்வேறு பகுதிகளில் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை புரிவதால், மேல்நிலை மின் கம்பி களை புதைவடங்களாக மாற்றி அமைப்பதன் மூலம் பொது மக்களுக்கு தடையில்லா மின் சாரம் வழங்கப்படுவதுடன், மின் விபத்துக்களும் தவிர்க்கப்படும்.

3. ரூபாய் 211 கோடி மதிப்பீட்டில் இரண்டு புதிய துணை மின் நிலையங்கள் நிறுவுதல்.

திருப்பூர் மாவட்டத்தில், புதிய 230 கி. வோ. கொங்கல் நகர் துணை மின் நிலையம் மற் றும் திருச்சி மாவட்டத்தில் புதிய 110 கி. வோ. தங்க நகர் துணை மின் நிலையம் என இரண்டு துணை மின் நிலையங்கள் ரூபாய் 211 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

4. ரூபாய் 217 கோடி மதிப்பீட்டில் 19 திறன் மின்மாற்றிகளை (Power Transformers) மேம் படுத்துதல்

சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டலங் களில் அதிகரித்து வரும் மின் தேவையினை கருத்தில் கொண்டும் மற்றும் மின் சுமை யைக் குறைப்பதற்கும், 19 திறன் மின்மாற்றிகளை (Power Transformers) மேம் படுத்தும் பணிகள் ரூபாய் 217 கோடி மதிப்பீட் டில் மேற்கொள்ளப்படும்.

5. தமிழ்நாடு அரசின் வீட்டுவசதி, தொழிற் சாலைகள் மற்றும் போக்குவரத்து துறைகளில் “விரிவான எரிசக்தி திறன் மேம்பாட்டு இயக் கம்” செயல்படுத்துதல்.

மின் திறனூக்க செயலகம் (Bureau of Ener gy Efficiency) 2023ஆம் ஆண்டுக்கான மாநில எரிசக்தி திறன் குறியீட்டை வெளியிட் டுள்ளது. இது மாநில அளவிலான எரிசக்தி திறன் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் முதலீ டுகள் குறித்த இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிகாட்டி யாகும். தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க அள வில் எரிசக்தி திறனை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் பெரும் அளவிலான மின்சார சேமிப்பை ஏற்படுத்துவதற்கும், வீட்டுவசதி, தொழிற்சாலைகள் மற்றும் போக்குவரத்து துறைகளில் “விரிவான எரிசக்தி திறன் மேம் பாட்டு இயக்கம்” செயல்படுத்தப்படும்.

6. பசுமை எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு தனியார் மூலம் 2000 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்.

அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்து தமிழ்நாட்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடை வதற்கு ஏதுவாக, சூரிய எரிசக்தி, காற்றாலை மற்றும் இதர பசுமை எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு தனியார் மூலம் 2000 மெகாவாட் பசுமை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சூரியசக்தி மேற்கூரை நிறுவுத்திறனை கண்டறிய இணையவழி மென்பொருள் உருவாக்குதல்:

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட் பட்ட பகுதிகளில் உள்ள தனி மற்றும் அடுக்கு மாடி வீடுகளின் சூரிய மேற்கூரை நிறுவுத்திறனை, மின் நுகர்வோர் தகவல்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பகு திகளின் ட்ரோன் படங்களைக் கொண்டு எளி தாக கண்டறிய இணையவழி மென்பொருள் ஒன்று புதிதாக உருவாக்கப்படும்.

8. காற்றாலை மற்றும் சூரிய எரிசக்தியுடன் இணைந்த (Hybrid) மின் உற்பத்தி நிலையங் களுக்கான புதிய கொள்கை வகுக்கப்படும்.

தற்போதுள்ள மின்கட்டமைப்பைப் பயன்ப டுத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி யினை அதிகரிப்பதற்காக, காற்றாலை மற்றும் சூரிய எரிசக்தியுடன் இணைந்த (Hybrid) மின் உற்பத்தி நிலையங்களுக்கான புதிய கொள்கை வகுக்கப்படும்.

9. மின் கடத்தல் வழித்தடங்களின் சுமை ஏற்று திறன் விதிமுறைகள் திருத்தம் செய்தல்.

புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங் களை அதிக அளவில் மாநில மின்கட்டமைப் பில் இணைப்பதற்கு ஏதுவாக, மின் கடத்தல் வழித்தடங்களின் சுமை ஏற்று திறன் விதிமு றைகள் திருத்தப்படும்.

10. நீரேற்று புனல் மின் திட்டங்களுக்கான புதிய கொள்கை வகுக்கப்படும்.

புதிய நீரேற்று புனல் மின் திட்டங்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் புதிய கொள்கை வகுக்கப்படும்.

11. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர் மானக் கழக களப்பணியாளர்களின் பாதுகாப் பினை உறுதி செய்வதற்கும், மின் கட்டமைப் புகளில் மின்சாரம் உள்ளதா என கண்டறியும் எச்சரிக்கை உணரி சாதனங்கள் வழங்குதல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மா னக் கழகத்தில் பணியாற்றும் களப்பணியா ளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் நில இணைப்பான்கள், கையுறைகள் மற்றும் இடுப்பு கயிறுகள் போன்ற அத்தியாவசியமான தனிப்பட்ட பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப் பட்டு வருகின்றன.

இதனுடன், களப்பணியாளர்களின் கூடு தல் பாதுகாப்பிற்காக, மின்சார சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் போது மின் கட்ட மைப்பு தனிமைப்படுத்தப்பட்டு பாதுகாப்பாக உள்ளதா என்பதை கண்டறியும் எச்சரிக்கை உணரி சாதனங்கள் ரூபாய் ஒரு கோடி மதிப் பீட்டில் வழங்கப்படும்.

12. மின் விநியோகத்தின் பாதுகாப்பு மற் றும் நம்பகத்தன்மையை மேம்படுத்தி, விவசா யிகளுக்கு பயனளிக்கும் வகையில் ரூ. 25 கோடி மதிப்பீட்டில் மின்கம்பிகளை மின்காப்பு செய்திட சிலிகான் ஓவர்ஹெட் லைன் இன்சு லேஷன் ஸ்லீவ்ஸ் (லாக்கிங் டைப்) நிறுவும் பணிகளை மேற்கொள்ளுதல்.

அடர்ந்த தோப்புகள் மற்றும் மரங்கள் உள்ள பகுதிகளில் மின் விநியோகத்தின் பாது காப்பு மற்றும் நம்பகத்தன்மையை மேம்ப டுத்தி, விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகை யில், தற்போதுள்ள மின்கம்பிகளை மின்காப்பு செய்திட சிலிகான் ஓவர்ஹெட் லைன் இன்சு லேஷன் ஸ்லீவ்ஸ் (லாக்கிங் டைப்) நிறுவும் பணிகள் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் மேற் கொள்ளப்படும்.

13. ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் உயர முத்த மற்றும் தாழ்வழுத்த மின்கம்பிகளில் மின் காப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.

தமிழ்நாடு முழுவதும், தென்னந்தோப்பு கள் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளின் வழியாக செல்லும் மின் பாதைகளில், மின் தடை ஏற்படுவதைத் தடுத்து, விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையிலும், வனப்பகுதிகளில் ஏற்படும் மின் விபத்துக்களை தவிர்க்கவும், உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் கம்பி களை ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மின் காப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்ப டும்.

14. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர் மானக் கழகத்தின் மின்கட்டமைப்பை வலுப்ப டுத்துவதின் ஒரு பகுதியாக ரூபாய் 75 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டு பணிகள்.

மூன்று புதிய 33/11 கி. வோ துணை மின் நிலையங்கள் நிறுவுதல் மற்றும் ஆறு 33/11 கி. வோ துணை மின் நிலையங்களிலுள்ள மின் மாற்றிகளின் திறனை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூபாய் 75 கோடி மதிப்பீட்டில் செய் யப்படும்.

15. ரூபாய் 6.50 கோடி மதிப்பீட்டில் மோல் டட் கேஸ் சர்க்யூட் பிரேக்கர் (Moulded Case Circuit Breaker) யானை வழித்தடங்களில் உள்ள மின் மாற்றிகளில் நிறுவி மின் விபத்து களை தவிர்த்தல்.

யானை வழித்தடங்களில் ஏற்படும் மின் விபத்துகளைத் தவிர்க்க, அடர்ந்த காடுகள் மற் றும் வனப்பகுதிகளில் உள்ள மின்மாற்றிக ளின் தாழ்வழுத்த பகுதியில் (LV Side) மோல் டட் கேஸ் சர்க்யூட் பிரேக்கர் (MCCB) ரூபாய் 6.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

16. ரூபாய் 4.8 கோடி மதிப்பீட்டில் 500 பட் டயப் பொறியாளர்களுக்கு ஒரு வருட கால தொழில் பழகுநர் பயிற்சி வழங்குதல்.

தொழில் பழகுநர் சட்டத்தின் கீழ், ரூபாய் 4.8 கோடி மதிப்பீட்டில் 500 பட்டயப் பொறியா ளர்களுக்கு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் பல் வேறு பிரிவுகளில் ஒரு வருட கால தொழில் பழகுநர் பயிற்சி வழங்கப்படும்.

17. ரூபாய் 1.5 கோடி செலவில் பணியாளர் களின் தொழில்நுட்பம் மற்றும் ஆளுமை திறன்களை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்ப டும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மா னக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடர மைப்புக் கழக பணியாளர்களின் தொழில்நுட்பம் மற்றும் ஆளுமை திறன் களை மேம்படுத்த, இந்த நிதியாண்டில் (2024-25), ரூபாய் 1.5 கோடி செலவில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

18. ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் தூத் துக்குடி அனல் மின் நிலையத்தின் அலகு 4ன் கொதிகலனில் 8 எண்ணிக்கை செறிவூட்டப் பட்ட நிலக்கரி எரிப்பான்களை நிறுவுதல்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் அலகு 4ன் கொதிகலனின் [Boiler] சி மற்றும் டி உயர நிலைகளில் 8 எண்ணிக்கை செறிவூட் டப்பட்ட நிலக்கரி எரிப்பான்களை [Low Load enRICH Coal Burner] கொள்முதல் செய்து, நிறுவி, பரிசோதனை செய்து, இயக்கும் பணி கள் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் மேற் கொள்ளப்படும்.

19. ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் தூத் துக்குடி அனல் மின் நிலையத்தில் மேம்படுத் தப்பட்ட CAAQMS நிலையத்தை தரவு பதி வேற்ற வசதியுடன் நிறுவுதல்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தற்போதுள்ள தொடர்ச்சியான சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தை (CAAQMS), தரவு பதிவேற்ற வசதியுடன் கூடிய புதிய CAAQMS நிலையமாக மாற்றுதல் மற் றும், CARE AIR மையம்/தமிழ்நாடு மாசு கட் டுப்பாட்டு வாரியம்/ சென்னை மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்/புது தில்லி ஆகிய நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்து தல் ஆகியவை ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட் டில் மேற்கொள்ளப்படும்.

### நிதித் துறை அறிவிப்புகள்.

1. நிதித்துறை மற்றும் கருவூலக் கணக்குத் துறை உயர் அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி :

நிதித்துறை மற்றும் கருவூலக் கணக்குத் துறை அலுவலர்களின் திறனை மேம்படுத்த தேவையான பயிற்சி இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனம் (ICAI), இந்திய நிறுவனங்களின் செயலாளர்கள் கழகம் (ICSI), சென்னை பொருளியல் கல்வி கழகம், சென்னை கணித அறிவியல் கழகம் மற்றும் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம் (IIM) ஆகிய நிறுவனங்கள் மூலமாக 1.50 கோடி ரூபாய் செலவில் நடப்பு நிதியாண்டில் வழங்கப்படும். இதனால் சுமார் ஆயிரம் அலுவலர்கள் பயன் பெறுவர்.

2. மாவட்ட அளவிலான கருவூலக் கணக்குத் துறை அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல்:

கருவூலக் கணக்குத் துறையின் அனைத்து மாவட்ட அளவிலான அலுவலர்க ளுக்கு, பட்டியல் ஏற்பளிப்பு/அனுமதி வழங் கும் பயிற்சி, தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய மின்னாளுமை பயிற்சி வழங்கப்படும். மேலும், துறைசார்ந்த அனைத்து விதிகள் மற் றும் தணிக்கை தொடர்பான பயிற்சி நடப் பாண்டில் 50 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. சென்னை, இந்திய தொழில்நுட்பக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்:

நிதித்துறை மற்றும் கருவூலக் கணக்குத் துறை அலுவலர்களின் நிதி மேலாண்மை மற் றும் தரவுப்பகுப்பாய்வு திறன்களை மேம்படுத் தும் வகையில் உரிய பயிற்சி வழங்க சென்னை, இந்திய தொழில்நுட்பக் கழகத்து டன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள் ளப்படும்.

4. இணைய கருவூலம் உருவாக்குதல்:

ரிசர்வ் வங்கி, மாநில கணக்காயர் மற்றும் அனைத்து பயனர் துறைகளை ஒருங்கி ணைத்துச் செயல்படும் வகையில் கருவூலக் கணக்குத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இணைய கருவூலம் அமைக்கப்படும்.

5. தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பினை திருத்தி எழுதுதல்/பதிப்பித்தல்:

தற்போதைய நடைமுறைக்கு ஏற்ற வகை யில் அனைத்து திருத்தங்களுடன் தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு திருத்தி எழுதி பதிப்பிக் கப்படும்.

6.செயல்திறன் தணிக்கை :

அரசுத்துறை மற்றும் முகமைகள் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் இலக்கு களை அடைந்துள்ளனவா என்பது குறித்து விரிவாக ஆய்வு செய்திட செயல்திறன் தணிக் கைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இதற்கென தலைமைத் தணிக்கை இயக் குநர் அலுவலகத்தில் சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப் படும். செயல்திறன் தணிக்கை முடிவுகளை ஆராய்ந்து திட்டச் செயலாக்கத்தில் உரிய சீர்தி ருத்தங்களை மேற்கொள்ள அரசளவில் சிறப் புக் குழு அமைக்கப்படும். வரும் நடப்பாண் டில் 40 கருப்பொருள்களில் செயல்திறன் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், உயர்நிலை தணிக்கை அலுவ லர்களுக்கு துறைசார் புலமை, தரவுப்பகுப் பாய்வு, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும்.

7.தணிக்கையாளர்களுக்கு திறன் மேம் பாட்டுப் பயிற்சி :

அரசு அலுவலகங்களின் நடைமுறைகள், திட்டங்கள், திட்டச் செயலாக்கம் பரந்து விரிந்து தணிக்கைச்சூழல் கடினமடைந்து வருவதா லும், பொதுமக்கள் உள்ளிட்ட பங்குதாரர்க ளின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் விரி வடைந்து வருவதாலும், தணிக்கைத் துறை களில் புதிதாக நியமனமாகும் அனைவருக் கும் வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சியை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவ னங்களுடன் இணைந்து தகவல் தொழில்நுட் பத் தணிக்கை, செயல்திறன் தணிக்கை, பணித்தணிக்கை, ஒப்பந்தத்தணிக்கை குறித்து அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

பணிபுரியும் மற்றும் புதியதாக பணி நியம னமாகும் தணிக்கை அலுவலர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் அளவிலான பயிற்சி நடத்தப்ப டும்.

மனித வள மேலாண்மைத் துறை அறி விப்புகள்

1. அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சி.

அரசு உயர் பதவிகளுக்கு தேர்வு செய்யப் படும் அலுவலர்கள் பணியில் சேரும் பொழுது கொடுக்கப்படும் பயிற்சியைத் தவிர பணியி டைப் பயிற்சிகள் தற்போது வழங்கப்படுவ தில்லை. அரசின் சேவைகளை மக்களிடம் விரைவாக கொண்டு சேர்க்கும் அலுவலர்கள், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தங்களது செயல் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டி உள்ளது. பல்வேறு துறைகளில் இணை இயக்குநர் நிலையில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர், ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவுத் துறை, வணிகவரித் துறை உள் ளிட்ட பல்வேறு துறைகளில் பணிபுரியும் அரசு உயர் அலுவலர்களுக்கு ஆளுமைத் திறன் மேம்பாடு, தகவல் தொழில் நுட்பம், வழக்கு மேலாண்மை போன்ற பொருண்மைகளில் நாட்டிலேயே தலைசிறந்த நிறுவனங்களைக் கொண்டு பணியிடைப் பயிற்சி வழங்கப்படும். இந்நிதியாண்டில் இதற்கென ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

2. தொகுதி-1 அலுவலர்களுக்கான பொது வான அடிப்படைப் பயிற்சித் திட்டம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வா ணையத்தால் நடத்தப்பட்ட 2022-2023 ஆம் ஆண்டிற்கான தொகுதி-1 பணிகளுக் கான தேர்வில், துணை ஆட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர். உதவி ஆணை யர் (வணிக வரி), கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு 95 அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் களுக்கான பயிற்சித் திட்டம் தற்போது தொடர்பு டைய துறைகளால் தனித்தனியே வகுக்கப் பட்டு, அதற்கேற்ப வெவ்வேறு காலகட்டங் களில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தொகுதி-1 அலுவலர்கள் பணியமர்த்தப்பட் டவுடன், தொடர்புடைய துறைகளை கலந்தா லோசித்து பொது அடிப்படைப் பயிற்சித் திட்டம் (Common Foundation Course) வழங்கப்படும்.

3. சட்டம் மற்றும் பயிற்சிப் பிரிவு.

அரசுப் பணியாளர்களின் பணி தொடர் பான பல்வேறு பொருண்மைகளில் நீதி மன் றங்களால் வழங்கப்படும் தீர்ப்புகளைத் தொகுப்பதற்காகவும், இப்பொருண்மை களைக் கையாளும் பணியாளர்களுக்கு தக்க பயிற்சி வழங்கும் பொருட்டும் மனித வள மேலாண்மைத் துறையில் சட்டம் மற்றும் பயிற்சிப் பிரிவு துவங்கப்படும்.

4. தகவல் பகுப்பாய்வுப் பயிற்சி.

அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்திவருகிறது. இத்திட்டங்கள் முறை யாக மக்களிடம் சென்றடைகிறதா என்பதனை ஆய்வு செய்யவும், தகுதியுடைய பயனாளிகள் எவரேனும் விடுபட்டு விட்டனரா என்பதை கண்டறியவும், கடைக்கோடி மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்றடையவும், இதன் வாயிலாக அரசுத் திட்டங்களை மேலும் செம் மைப்படுத்தவும் அரசு அலுவலர்களுக்கு தர வுப் பகுப்பாய்வு (Data Analysis) குறித்து சிறப் புப் பயிற்சி அளிக்கப்படும். இந்நிதியாண்டில் இதற்கென ஐம்பது லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப் படும்.

5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளுக்கு புதிய வாகனங்கள்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அதி காரிகள் தங்கள் பணிகளை திறம்பட மேற் கொள்வதற்கென, பயன்பாட்டில் இருக்கும் பழைய வாகனங்களைக் கழித்து, மாற்றாக ரூ.2.58 கோடியில் 22 நான்கு சக்கர வாக னங்களும், 44 இரு சக்கர வாகனங்களும் வழங்கப்படும்.

இவ்வாறு சட்டப் பேரவையில் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கம்பன் நகர் பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் , புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன். முத்துசாமி. விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷித், நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.கணேஷ் ஆகியோர் முன்னிலையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இளையராஜா திறந்து வைத்தார். இந்நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாநில விவசாய அணி துணைத் தலைவர் சந்திரசேகரன், மாவட்ட அவைத் தலைவர் அரு. வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.பா.சரவணன், மாநகர செயலாளர் ஆ.செந்தில், மாநகர மேயர் திலகவதி செந்தில் , மாநகர துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் தவ.பாஞ்சாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் இராசு. சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, உரக்கடை கருப்பையா, எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, சி. அரங்கநாயகம், கவிவேந்தன், பா.ரெங்கராஜ், வை. நடராஜன், மா.மணிவேல், முத்துகு பழனிவேலு, மு.ராஜதுரை, வட்ட கழக செயலாளர் அருண்குமார் மற்றும் வட்ட கழக செயலாளர்கள், அணைத்து நிலை நிர்வாகிகள் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.